முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எம்.சி.ஓ.பி.எண். 124/2022

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | செந்தமிழ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | ஜெயபிரகாஷ் |
| வயது | .. | 29 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | அனக்காவூர் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ஆம் நாள் புதன்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.2, வாகன பதிவுச்சான்று நகல் ம.த.சா.ஆ.3, வாகன காப்பீட்டு சான்று நகல் ம.த.சா.ஆ.4, ஓட்டுநர் உரிமம் நகல் ம.த.சா.ஆ.5, ஜெயபிரகாஷ் ஆதார் அட்டை நகல் ம.த.சா.ஆ.6, ஜெயபிரகாஷ் இறப்பு சான்று நகல் ம.த.சா.ஆ.7, பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.த.சா.ஆ.8, மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.த.சா.ஆ.9, ஜெயபிரகாஷ் இறப்பு அறிக்கை நகல் ம.த.சா.ஆ.10, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த குற்ற எண். 6/2021 நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் ம.த.சா.ஆ.11, செய்யாறு குற்றவியல் நீதிமன்றத்தில் 1ம் எதிர்மனுதாரர் மற்றும்

அவரது குடும்ப உறுப்பினர்கள் வரதட்சணை கொடுமை செய்த குற்றத்திற்காக குற்றவாளி என தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் ம.த.சா.ஆ.12, மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் குடும்ப உறுப்பினர் கணினி நகல் ம.த.சா.ஆ.13, குற்ற எண். 107/2021 இறுதி அறிக்கை நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் ம.த.சா.ஆ.14.